10 APR 1996

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1995 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் (திருத்தச்) சட்டம்

---

*(1995 திசெம்பர் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

1995, திசெம்பர் மாதம் 15 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.50 தபாற் செலவு : ரூபா 3.55

# 1995 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் (திருத்தச்) சட்டம்

[1995 திசெம்பர் மாதம் 11ஆம் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 86/93

## உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானவொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படுவதான) உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:— 417 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அதன் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(2) இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் திறைசேரி உண்டியல்களை வழங்கும் அத்துடன் திருப்பிக்கொடுக்கும் நோக்கத்துக்கும அது சம்பந்தமாகவும் அவசியமான எல்லாச் செயல்களும் அல்லது காரியங்களும், மத்திய வங்கியினால் திறைசேரிப் பிரதிச் செயலாளரின் சார்பில் செய்யப்படுதல் வேண்டும்.".

(ஆ) அதன் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிடுவதன் மூலமும் ; அத்துடன்

(இ) அதன் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(3) ஒன்றில் எழுத்திலான சான்றிதழ்கள் என்ற வடிவத்திலான உண்டியல்களாக அல்லது கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களாகத் திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படலாம்.

(4) திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்வதற்கான ஏதேனும் விண்ணப்பம் அல்லது எவையேனும் விலைக்கேள்விகள், தேசிய பொருளாதாரத்தின் அக்கறைகளைக் கருத்திற்கொண்டு முதனிலை வணிகர்களுக்கும் பதவிப்பெயர் குறிக்கப்பட்ட வணிகரல்லாத விலைக்கேள்வியாளர்களுக்கும் மட்டுப்படுத்தப்பட வேண்டும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, "தீர்மானித்துத் தீர்மானிக்கின்ற அத்தகைய நேரத்தில் அல்லது நேரங்களில்" என்ற சொற்களுக்குப் பதிலாக "தீர்மானித்துத் தீர்மானிக்கின்ற அத்தகைய நேரத்தில் அல்லது நேரங்களில், ஆனால் வழங்கற் திகதியிலிருந்து ஓராண்டுக்குப் பிந்தாமல்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.**

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

**“கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்கள் தவிர்ந்த திறைசேரி உண்டியல்கள்.**

7. (1) கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்கள் தவிர்ந்த, இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு திறைசேரி உண்டியலும் திறைசேரிப் பிரதிச் செயலாளரின் ஒப்பத்தைப் படியுருவிற் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கட்டுப்பணமில்லாத திறைசேரி தவிர்ந்த ஒவ்வொரு திறைசேரி உண்டியலுக்குமான உரித்து, உண்டியலைப் புறக்குறிப்பிடுவதன் மூலமும் ஒப்படைப்பதன் மூலமும் கைமாற்றப்படற்பாலதாதல் வேண்டும்.

(3) கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல் தவிர்ந்த ஒவ்வொரு திறைசேரி உண்டியல் தொடர்பிலும் —

(அ) திறைசேரி உண்டியலின் புறக்குறிப்பெதுவும், அந்நோக்கத்துக்காக ஏற்பாடு செய்யப்பட்ட இடைவெளிகளுள் ஒன்றில் உண்டியலின் பிற்புறத்தில் அல்லது ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்பட்டு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஒரு படிவத்திலுள்ளதாக தனி வேறான ஒரு குறித்தொதுக்கலில் அல்லது வேறு சாதனத்தில் எழுதப்பட்ட உண்டியலை வைத்திருப்பவரின் ஒப்பத்தினால் செய்யப்பட்டாலொழிய, செல்லுபடியாதலாகாது;

(ஆ) ஆளொருவர் திறைசேரி உண்டியலொன்றில் புறக்குறிப்பிட்டுள்ளார் அல்லது புறக்குறிப்பிட்டு ஒப்படைத்துள்ளார் என்ற காரணத்தினால் மட்டும் அதன்மீது வருமதியாகவுள்ள ஏதேனும் பணத்தைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.”.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17 என்ற புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.**

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17 என்ற பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

**“கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களை வழங்குதலும், அவற்றில் வியாபாரஞ் செய்தலும் அவற்றைப் பேணுதலும்.**

8. (1) இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களை வழங்குவதற்கும் அவற்றில் வியாபாரம் செய்வதற்கும் அவசியமான ஏதேனும் நடவடிக்கையை எடுப்பதற்கு மத்திய வங்கி அதிகாரம் கொண்டதாதல் வேண்டும். மேற்போந்தவற்றின் பொதுமையை வரையறுக்காமல், மத்திய வங்கி பின்வருவனவற்றைப் பொறுப்பேற்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் அதிகாரம் கொண்டதாதல் வேண்டும் :—

(அ) கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களை வழங்குவதனையும் அவற்றில் வியாபாரம் செய்வதனையும் பதிவதற்கு மத்திய வங்கி பதிவேடுகளில் பதிவீடுகளைச் செய்தலும் பேணுதலும்;

(ஆ) நேரடி பங்குபற்றுநர்களுக்காக அல்லது மத்திய வங்கிக்காக அல்லது அவர்களின் அல்லது அதன் சார்பில், கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களின் சொத்துவத்தை அல்லது கட்டுக்காப்பாக வைத்திருக்கைகளைப் பதிவதற்குக் கணக்குகளை பேணுதல் ;

(இ) 9 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட நேரடிப் பங்குபற்றுநர்களைக் காலத்துக்குக் காலம் நியமித்தலும், கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களில் அவர்களின் கொடுக்கல் வாங்கல்களும் நேரடிப் பங்குபற்றுநர்களாக அவர்களினது கடமைகளின் புரிகையும் தொடர்பில் அத்தகைய நேரடிப் பங்குபற்றுநர்களை ஒழுங்குபடுத்தலும், மேற்பார்வை செய்தலும் அல்லது கண்காணித்தலும்;

(ஈ) 10 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட வணிகர் நேரடிப் பங்குபற்றுநர்களைக் காலத்துக்காலம் நியமித்தலும், கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களில் அவர்களின் கொடுக்கல் வாங்கல்களும் வர்த்தகர் நேரடிப் பங்குபற்றுநர்களாக அவர்களினது கடமைகளின் புரிகையும் தொடர்பில் அத்தகைய வர்த்தகர் நேரடிப் பங்குபற்றுநர்களை வணிகர் இடைத்தரகர்கள் ஒழுங்குபடுத்தலும், மேற்பார்வை செய்தலும் அல்லது கண்காணித்தலும்;

(உ) வணிகர் இடைத்தரகர்களைக் காலத்துக்குக காலம் நியமித்தலும், கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களில் அவர்களின் தரகுத் தொழிலும் வணிகர் இடைத் தரகர்களாக அவர்களினது கடமைகளின் புரிகையும் தொடர்பில் அத்தகைய வணிகர் இடைத்தரகர்களை ஒழுங்குபடுத்தலும், மேற்பார்வை செய்தலும் அல்லது கண்காணித்தலும்.

(ஊ) முதனிலை வணிகர்களைக் காலத்துக்குக் காலம் நியமித்தலும், கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களில் அவர்களின் கொடுக்கல்வாங்கல்களும் முதனிலை வர்த்தகர்களாக அவர்களினது கடமைகளின் புரிகையும் தொடர்பில் அத்தகைய முதனிலை வர்த்தகர்களை ஒழுங்குபடுத்தலும், மேற்பார்வை செய்தலும் அல்லது கண்காணித்தலும்;

(எ) பதவிப்பெயர் குறிக்கப்பட்ட வர்த்தகரல்லாத விலைக்கேள்வியாளர்களை நியமித்தலும், கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களில் அவர்களின் கொடுக்கல் வாங்கல்களும் வர்த்தகரல்லாத விலைக்கேள்வியாளர்களாக அவர்களினது கடமைகளின் புரிகையும் தொடர்பில் அத்தகைய வர்த்தகரல்லாத விலைக்கேள்வியாளர்களை ஒழுங்குபடுத்தலும், மேற்பார்வை செய்தலும், கண்காணித்தலும்;

(ஏ) கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களுக்கான ஒழுங்கான சந்தையொன்றை மேம்படுத்துவதற்கும் அபிவிருத்திசெய்வதற்கும் நடத்தைக் கோவையொன்றை வகுத்தமைத்தல்.

(2) மத்திய வங்கியானது, 8, 9, 10, 11 என்னும் பிரிவுகளில் வேறுவகையில் ஏற்பாடு செய்யப்படாத அளவுக்கு, பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்யுமாறு, நேரடிப் பங்குபற்றுநர்களுக்கு அல்லது அவர்களின் எதேனும் வகுதிக்குப் பணிப்புகளை வழங்கலாம் :—

(அ) வணிகர் நேரடிப் பங்குபற்றுநர்களின் வாடிக்கையாளர்களது கணக்குகள் பேணப்பட வேண்டிய அத்துடன் நிருவகிக்கப்படவேண்டிய விதம்;

(ஆ) முதல் தொகையின் கொடுப்பனவுகளும், அத்துடன் ஏதேனும் கடன் மீட்பு வரும்படிகள் அத்தகைய கணக்குகளுக்கு வரவுவைக்கப்பட வேண்டிய நேரங்கள்;

(இ) அத்தகைய கணக்குகளைப் பேணுவதற்கும் நிருவகிப்பதற்கும் அறவிடப்படக்கூடிய கட்டணம்;

(ஈ) நேரடிப் பங்குபற்றுநர்கள், வணிகர் நேரடிப் பங்குபற்றுநர்கள், வணிகர் இடைத்தரகர்கள், அல்லது முதனிலை வணிகர்கள் என்போரை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், அல்லது கண்காணித்தல்;

(உ) கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்கள் அல்லது அதனகத்துள்ள அக்கறைகள் கொள்வனவு செய்யப்படக்கூடிய கைமாற்றப்படக் கூடிய அடகுவைக்கப்படக்கூடிய அல்லது பாரபந்தத்திற்குட்படுத்தக்கூடிய விதமும் உபாயங்களும்.

நேரடிப் பங்கு பற்றுநர்கள்.

9. (1) மத்திய வங்கியானது, எவரேனும் முதனிலை வணிகரை அல்லது வேறு ஆளை நேரடிப்பங்குபற்றுநரொருவராக இருப்பதற்கென எழுத்தில் நியமிக்கலாம். நேரடிப்பங்குபற்றுநர் ஒவ்வொருவரும், மத்திய வங்கியுடன், இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான அதன் சொந்த, கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல் கணக்கைப் பேணுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர் கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களைக் கொண்டிருப்பதற்காக மத்திய வங்கியுடன் அதன் சொந்தக் கணக்கில் தனியான கணக்கொன்றைப் பேணுதல் வேண்டும். அத்தகைய கணக்கு, காலத்திற்குக் காலம் மத்திய வங்கியினால் எழுத்தில் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலும் விதத்திலும் நேரடிப் பங்குபற்றுநரினால் பேணப்படுதல் வேண்டும்.

(3) மத்திய வங்கி, நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரின் கணக்குப் பற்றிய பதிவேடுகளைப் பேணுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பதிவேடுகள், அத்தகைய கணக்கின் நிலையினது முடிவான சான்றாதலும் வேண்டும், அத்துடன் அப்பதிவேடுகள் மத்திய வங்கியையும் நேரடிப் பங்குபற்றுநரையும் பிணிப்பதாதலும் வேண்டும்.

(4) மத்திய வங்கி (ஒன்றில் முதலிலிருந்தான அல்லது மீட்புவருப்படிகளிலிருந்தான) எல்லாப் பணத்தொகைகளையும், மத்திய வங்கியுடன் நேரடிப் பங்குபற்றுநர்களினால் பேணப்பட்டுவரும் கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களின் கணக்குகளுக்கிணங்க, அந்தக் கணக்குகள் அவர்களது சொந்தக் கணக்கில் வைத்திருக்கப்படும் கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்கள் தொடர்பிலாயினுஞ்சரி அல்லது வணிகர் நேரடிப்பங்குபற்றுநர்களின் விடயத்தில், அவர்களது சொந்தக் கணக்கில் வைத்திருக்கப்படும் அத்தகைய திறைசேரி உண்டியல்களிலும் அத்துடன் கூட்டுமொத்த வாடிக்கையாளர் கணக்குகள் தொடர்பில் வைத்திருக்கப்படும் திறைசேரி உண்டியல்களிலாயினுஞ்சரி அவர்களுக்கு அவை கொடுபடற்பாலனவாக வரும் திகதியில் செலுத்துதல் வேண்டும். அத்தகைய கொடுப்பனவுகள் மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வழிகளிலும் அத்தகைய முறையிலும் செய்யப்படுதல் வேண்டும்.

(5) நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர், மத்திய வங்கிக்கு அதன் சொந்த, கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியற்கணக்குத் தொடர்பானவையும் வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரின் விடயத்தில், அதன் சொந்தக் கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல் கணக்கு, அத்துடன் அதன் கூட்டு மொத்த வாடிக்கையாளர் கணக்கு அல்லது வாடிக்கையாளர் கணக்கு அல்லது காலத்திற்குக் காலம் மத்திய வங்கி குறித்துரைக்கக் கூடியவாறான அதன் சொந்தக் கணக்குத் தொடர்பானவையுமான அத்தகைய விபரத்திரட்டுகள், விடயங்கள், விபரங்கள் அல்லது தகவல்கள் என்பவற்றைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(6) மத்திய வங்கியானது, பணச்சபையால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அதன் அலுவலர்கள் எவருடாகவும், அதன் சொந்தக் கணக்கில் வைத்திருக்கப்படும் கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்கள் தொடர்பிலான எவையேனும் புத்தகங்கள், பதிவேடுகள் அல்லது கணக்குகள் உட்பட எவையேனும் கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்கள் தொடர்பாக அல்லது அவற்றைப் பாதிக்கின்றனவும், நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரின் விடயத்தில் அதன் சொந்தக் கணக்கிலும் கூட்டு மொத்த வாடிக்கையாளர் கணக்கிலும் வைத்திருக்கப்படும் அதன் கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்கள் தொடர்பிலும் நேரடிப் பங்குபற்றுநரொருவரால் பேணப்படுவனவான எவையேனும் புத்தகங்கள், பதிவேடுகள் அல்லது கணக்குகள் என்பவற்றைப் பரிசோதனை செய்யலாமென்பதுடன் அவற்றின் பிரதிகளையும் எடுக்கலாம். நேரடிப் பங்குபற்றுநரும் அதன் அலுவலர்கள், பணிப்பாளர்கள், ஊழியர்கள், சேவையாளர்கள் அத்துடன் முகவர்கள் என்போர், மத்திய வங்கியால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் புத்தகங்கள், பதிவேடுகள், கடிதத்தொடர்பு அல்லது வேறெவையேனும் ஆவணங்கள் என்பவற்றை மத்திய வங்கிக்குக் கொடுத்துதவுதல் வேண்டுமென்பதுடன் கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்கள் தொடர்பாக இக்கட்டளைச் சட்டத்தினால் மத்திய வங்கிமீது சுமத்தப்பட்ட கடமைகளைப் புரிவதற்கு அது தேவைப்படும் அத்தகைய எல்லா உதவியையும் மத்திய வங்கிக்கு ஏற்பாடு செய்தலும் வேண்டும்.

(7) அரசாங்கம் ஏதேனும் பொறுப்பினை உறும் பட்சத்தில் அல்லது கட்டுப்பணமில்லாதவொரு திறைசேரி உண்டியல் தொடர்பாக எவையேனும் முதல் அல்லது மீட்சி வரும்படிகளின் கொடுப்பனவுகளைச் செய்யும் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரின் அல்லது வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரின் ஏதேனும் தவணை தவறுகையின் விளைவாக அல்லது அது காரணமாக அத்தகைய பொறுப்பு எழுகின்ற சந்தர்ப்பத்தில், அத்தகைய கொடுப்பனவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில், அத்தகைய பங்குபற்றுநர், அரசாங்கத்தால் கோரப்படுவதன்மேல், அத்தகைய பொறுப்பு அல்லது கொடுப்பனவு தொடர்பில் அரசாங்கத்திற்கு நட்டோத்தாவாத மளிப்பதற்கு உட்பட்டவராதலும் வேண்டும்.

இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக "தவணை தவறுகை" என்பது பின்வருவனவற்றை உள்ளடக்கும் :—

(அ) நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரின் அல்லது வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரின் பக்கலில் இக்கட்டளைச் சட்டத்தினால் அவருக்குக் குறித்துரைக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் பணியைக் கொண்டுநடாத்துவதில் அல்லது கடமையை நிறைவேற்றுவதிலான ஏதேனும் அசட்டை அல்லது தவறுகை; அத்துடன்

(ஆ) நேரடிப் பங்குபற்றுநரொருவரின் அல்லது வணிகர் நேரடிப் பங்குபற்றுநரொருவரின் பக்கலில், இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் தவறொன்றாக அமையும் அல்லது இக்கட்டளைச்சட்டத்தினால் கையாளப்படும் பின்வரும் ஏதேனும் கருமம் தொடர்பாக வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தவறொன்றாக அமையும் ஏதேனும் செயல் அல்லது தவிர்வு —

(i) அத்தகைய தவறு தொடர்பாக ஏதேனும் குற்றவழக்கு இருந்தாலும்சரி இல்லாவிட்டாலும் சரி; அல்லது

(ii) அத்தகைய செயல் அல்லது தவிர்வு நேரடிப் பங்குபற்றுநரால் அல்லது வணிகர் நேரடிப் பங்குபற்றுநரால் அல்லது அத்தகைய நேரடிப் பங்குபற்றுநரின் அல்லது வணிகர் நேரடிப் பங்குபற்றுநரின் எவரேனும் பணிப்பாளர், அலுவலர், ஊழியர் அல்லது முகவரால் செய்யப்பட்டிருப்பினும் சரி.

10. (1) மத்திய வங்கியானது, எவரேனும் நேரடிப்பங்குபற்றுநரை, வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவராக எழுத்தில் நியமிக்கலாம். வணிகர் நேரடிப் பங்குபற்றுநர்.

(2) வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர், மத்தியவங்கியுடன் அதன் கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல் கணக்குடன் மேலதிகமாகவும், புறம்பாகவும், கூட்டுமொத்த வாடிக்கையாளர் கணக்கொன்றைப் பேணுதல் வேண்டும். அது அத்தகைய வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஊடாக, இப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவின்கீழ் பயனுறுத்தப்படும் எல்லாக் கைமாற்றங்கள் தொடர்பிலுமான தனிக் கூட்டுமொத்தக் கணக்கொன்றாதல் வேண்டும். கூட்டுமொத்த வாடிக்கையாளர் கணக்கு, மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்திலும், விதத்திலும் வணிகர் நேரடிப் பங்குபற்றுநரால் பேணப்படுதல் வேண்டும்.

(3) வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர் மாத்திரம், ஏனையோர் சார்பில் கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களில் கொடுக்கல் வாங்கல்களைச் செய்யலாம். ஒன்றில் கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியலொன்றை கைமாற்றம் செய்வதற்கு அல்லது கைமாற்றம் ஒன்றைப் பெறுவதற்கு விரும்புகின்றவரான நேரடிப் பங்குபற்றுநரும் மத்திய வங்கியும் தவிர்ந்த ஆளெவரும், வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஊடாக மாத்திரமே அவ்வாறு செய்யலாம்.

(4) வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர், அதன் வாடிக்கையாளர்கள் ஒவ்வொருவர் தொடர்பிலும், ஒருகலக்கையும் இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் அவரது கடமைகளைப் புரிகின்றதை இயலச் செய்வதற்கு அவசியமாகக்கூடியவாறான அல்லது தேவையாகக்கூடியவாறான அதன் வாடிக்கையாளர் தொடர்பான வேறு ஏவையேனும் புத்தகங்கள், பதிவேடுகள், அத்துடன் கோவைகள் என்பவற்றையும் பேணுதல் வேண்டும்.

(5) வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர், அதன் வாடிக்கையாளர் ஒவ்வொருவருக்கும், அத்தகைய வாடிக்கையாளர்களின் கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்கள் தொடர்பில், மத்திய வங்கியினால் அதற்காகக் குறித்துரைக்கப்பட்ட திகதியில் அல்லது திகதிகளில், அல்லது அதற்குமுன்னர் ஒரு மாதாந்த அல்லது வேறு காலாந்தரக் கூற்றை அல்லது கூற்றுக்களை வழங்குதல் வேண்டும். அத்தகைய கூற்று ஒவ்வொன்றும், மத்திய வங்கி குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கும், அத்தகைய படிவத்திலும் இருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தகவலைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(6) ஐம்பதாம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான, வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் கூட்டுமொத்த வாடிக்கையாளர் கணக்கில் வைத்திருக்கப்படும் கட்டுப்பணமற்ற திறைசேரி உண்டியல்கள் மீது போதுமானதான தொகையில் அத்தகைய கொடுப்பனவுகளை வணிகர் நேரடிப்பங்குபற்றுநர் மத்திய வங்கியிடமிருந்து பெற்றுக் கொண்டதன்மேல், வணிகர் நேரடிப் பங்குபற்றுநரானவர் அவை கொடுபடற்பாலனவாக வரும் திகதியன்று அதற்கு உரித்துடைய நிறத்தவருக்கு அல்லது நிறத்தவர்களுக்கு அத்தகைய கட்டுப்பணமற்ற திறைசேரி உண்டியல்கள் மீது கொடுபடற்பாலனவான (ஒன்றில் முதல் தொகையான அல்லது மீட்பு வரும்படிகள் வகையான) எல்லாத் தொகைகளையும் செலுத்துதல் வேண்டும்.

அத்தகைய கொடுப்பனவுகள் மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான நேரத்திலும் அத்தகைய முறையிலும் அத்தகைய வழிவகைகள் மூலமும் செய்யப்படுதல் வேண்டும்.

(7) இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவருக்கூடாகப் பயனுறுத்தப்பட்ட கட்டுப்பணமற்ற திறைசேரி உண்டியல்களின் கைமாற்றம் ஒவ்வொன்றும் இப்பிரிவிலும் 11ஆம் பிரிவிலும் ஏற்பாடு செய்யப்பட்ட முறையிலும் அந்நோக்கங்களுக்காகவும் கொடுத்து வாங்கப்படுதல் வேண்டும்.

(8) இப்பிரிவின் (2) ஆம் (4) ஆம் உட்பிரிவுகளின்கீழ் வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரால் பேணப்படும் கணக்கு ஒரு வாடிக்கையாளரை அது தொடர்புறுத்துகின்ற அளவுக்கு வணிகர் நேரடிப் பங்குபற்றுநருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையே அந்தரங்கமானதாக இருத்தல் வேண்டுமென்பதுடன் மத்திய வங்கி அல்லது சட்டத்தினால் வேறு வகையாகத் தேவைப்படுத்தப்பட்ட அல்லது வாடிக்கையாளரின் மரபுரிமையாளர்கள், மரணசாதன நிறைவேற்றுநர்கள் அல்லது சாட்டுதல்காரர்கள் தவிர்ந்த ஆள் எவருக்கும் அவ்வாறு வெளியிடுவது வாடிக்கையாளரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டிருந்தால் ஒழிய ஆள் எவருக்கும் வெளிவிடப்படுதல் ஆகாது.

(9) வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர் அத்தகைய வணிகர் நேரடிப் பங்குபற்றுநருக்கூடாக அத்தகைய வாடிக்கையாளரினால் எடுக்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட எல்லாக் கைமாற்றங்கள் தொடர்பிலும் வாடிக்கையாளர்களுக்கு முழுமையாக பொறுப்புடையவராதலும் பொறுப்பாளியாதலும் வேண்டும்.

கட்டுப்பணமற்ற திறைசேரி உண்டியல்களை கைமாற்றுதல்.

11. (1) வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவர் மத்திய வங்கி தவிர்ந்த அல்லது வாடிக்கையாளர் கணக்கொன்று கைமாற்றப் பெறுபவர் ஒருவர் தொடர்பாக வேறொரு வணிகர் நேரடிப் பங்குபற்றுநரால் பேணப்படுகின்றவிடத்து தவிர 10ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவுக்கிணங்க அத்தகைய வணிகர் நேரடிப் பங்குபற்றுநருக்கூடாகப் பயனுறுத்தப்பட்ட ஏதேனும் கைமாற்றத்திற்கான திறத்தவர் ஒருவராக உள்ள நேரடிப் பங்குபற்றுநர் தவிர்ந்த கட்டுப்பணமற்ற திறைசேரி உண்டியல்களின் ஒவ்வொரு கைமாற்றுபவர் அத்துடன் கைமாற்றம் பெறுபவர் தொடர்பிலும் கணக்கொன்றைப் பேணிவருதல் வேண்டும். ஆனால் வாடிக்கையாளர் கணக்கொன்று வேறொரு வணிகர் நேரடிப் பங்குபற்றுநரால் பேணப்படும் விடயத்தில் முதலில் கூறப்பட்ட வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் இரண்டாவதாகக் கூறப்பட்ட வணிகர் நேரடிப் பங்குபற்றுநரின் கைமாற்றம், பெறுபவரின் கணக்குக்கு கட்டுப்பணமற்ற திறைசேரி உண்டியல்களைக் கைமாற்றுவித்தல் வேண்டும்.

(2) கட்டுப்பணமற்ற திறைசேரி உண்டியல்களின் கைமாற்றம் ஒன்று 10 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்கிணங்க எவரேனும் ஆளினால் செய்யப்பட்டவிடத்து எந்த வணிகர் நேரடிப் பங்குபற்றுநருக்கூடாக அக்கைமாற்றம் பயனுறுத்தப்பட்டதோ அந்த வணிகர் நேரடிப்பங்குபற்றுநர் உடனடியாக மத்திய வங்கியினால் காலத்துக்குக் காலம் குறித்துரைக்கப்படும் படிவத்திலும் முறையிலும் —

(i) கைமாற்றுபவருக்கு அத்தகைய கைமாற்றம் தொடர்பில் உறுதிப்பாடொன்றை அல்லது ஏற்றுக்கொண்டமைபற்றிய பற்றுச்சீட்டு ஒன்றை வழங்க வேண்டும்; அத்துடன்

(ii) கைமாற்றம் பெறுபவருக்கு அத்தகைய வணிகர் நேரடிப்பங்குபற்றுநர் கைமாற்றம் பெறுபவரின் திறைசேரி உண்டியல்கள் தொடர்பில் கணக்கொன்றைப் பேணுபவராக இருந்தால், அத்தகைய கைமாற்றம் தொடர்பில் உறுதிப்பாடொன்றை அல்லது ஏற்றுக்கொண்டமை பற்றிய பற்றுச் சீட்டொன்றை வழங்குதல் வேண்டும்;

ஆயின், எவ்வாறாயினும் மேற்சொல்லப்பட்ட வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் தவிர்ந்த ஒரு வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் கைமாற்றம் பெறுபவரின் கட்டுப்பணமற்ற திறைசேரி உண்டியல்கள் தொடர்பில் வாடிக்கையாளர் கணக்கொன்றைப் பேணுகின்றவராக இருந்தால் முதலில் கூறப்பட்ட வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் உடனடியாக மத்திய வங்கியினால் காலத்திற்குக்காலம் குறித்துரைக்கப்பட்ட முறையில் அத்தகைய

கைமாற்றம் பற்றி இரண்டாவதாகக் கூறப்பட்ட வணிகர் நேரடிப் பங்குபற்றுநருக்கு அறிவித்தல் வேண்டும். அத்துடன் அத்தகைய இரண்டாவதாகக் கூறப்பட்ட வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் உடனடியாக கைமாற்றம் பெற்றவருக்கு மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்பட்ட முறையிலும் படிவத்திலும் உறுதிப்பாடொன்றை அல்லது பெற்றமைபற்றிய பற்றுச் சீட்டொன்றை வழங்குதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்ட உறுதிப்பாடு அல்லது பெற்றுக்கொண்டமைபற்றிய பற்றுச்சீட்டு கைமாற்றப்படக்கூடியதாதலாகாது என்பதுடன் அதனை வழங்கிய வணிகர் நேரடிப் பங்குபற்றுநருக்கும் அது வழங்கப்பட்ட வாடிக்கையாளருக்கும் இடையே அது தொடர்பிலான 10ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின்கீழ் கட்டுப்பணமற்ற திறைசேரி உண்டியல்களின் கைமாற்றத்துக்கான சான்றாக மாத்திரமே பயன்படுத்தப்படல் வேண்டும்.

(4) மத்திய வங்கியுடன் வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் ஒருவரால் பேணப்படும் கூட்டுமொத்த வாடிக்கையாளர் கணக்கிலுள்ள பணத் தொகையானது 10 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்கிணங்க வணிகர் நேரடிப் பங்குபற்றுநருக்கூடாகப் பயனுறுத்தப்பட்ட கைமாற்றம் ஒன்றினால் பாதிக்கப்பட்டவிடத்து வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் உடனடியாக அத்தகைய கைமாற்றத்தின் மூலம் அத்தகைய தொகையில் ஏற்பட்ட ஏதேனும் மாற்றம்பற்றி தகவலை மத்திய வங்கிக்கு தெரியப்படுத்துதல் வேண்டும்.

(5) மத்திய வங்கியானது இப்பிரிவின்கீழ் எழுத்தில் இல்லாத படிவத்தில் இருக்கவேண்டுமென தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் அறிவித்தலை அல்லது உறுதிப்பாட்டை அல்லது பெற்றுக்கொண்டமைபற்றிய பற்றுச்சீட்டை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான கம்பி மூலம் தொலைபேசி மூலம் செய்மதி மூலம் படத்தின் மூலம் அல்லது வேறு ஏதேனும் அத்தகைய இலத்திரனியல் காந்த அல்லது கட்புல வழிகள் மூலம் அனுப்பப்பட அல்லது ஒப்படைக்கப்பட அனுமதிக்கலாம்.

**மத்திய வங்கியின் தத்துவங்கள் அலுவலர்கள் மூலமாகப் பிரயோகிக்கப்படுதல்.**

12. இக்கட்டளைச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் மூலம் ஏதேனும் தத்துவம் கடமை அல்லது பணி மத்திய வங்கியினால் பிரயோகிக்கப்படவேண்டுமென அல்லது புரியப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டுள்ள அல்லது தேவைப்படுத்தப்பட்ட போதிலெல்லாம் அத்தகைய தத்துவம் கடமை அல்லது பணி மத்திய வங்கியின் அலுவலர் ஒருவரால் அல்லது மத்திய வங்கியின் பணச்சபையினால் அதன் சார்பில் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் ஆளினால் பிரயோகிக்கப்படலாம் அல்லது புரியப்படலாம்.

**நடவடிக்கைக்கான பாதுகாப்பு.**

13. தொடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் அரசாங்கத்திற்கெதிராக பணச்சபைக்கெதிராக அல்லது மத்திய வங்கியின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு எதிராக இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் அரசாங்கத்தினால் பணச்சபையினால் அல்லது மத்திய வங்கியின் எவரேனும் அத்தகைய அலுவலரால் அல்லது சேவையாளரால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் கொடுப்பனவு தொடர்பாக அல்லது செயல் தொடர்பாக இருத்தலாகாது.

14. (1) (அ) இக்கட்டளைச் சட்டத்தின் அல்லது அதன்கீழ் கொடுக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் கட்டளையின் அல்லது பணிப்பின் ஏற்பாட்டுக்கிணங்கவொழுகத் தவறுகின்ற; தவறுகள்.

(ஆ) இக்கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக தமது அறிவுக்கெட்டியவரை அவற்றின் பொருளடக்கங்கள் பொய்யாக அல்லது செம்மையற்றவையாக இருக்கும் ஏதேனும் தகவலை அல்லது ஏதேனும் விவரத் திரட்டைக் கொடுத்துதவுகின்ற;

(இ) ஏமாற்றும் கருத்துடன் மத்திய வங்கியின் ஏதேனும் பதிவேடுகளில் அல்லது எவரேனும் நேரடிப் பங்கு பற்றுநரின் அல்லது எவரேனும் முதலிலை வணிகரின் ஏதேனும் புத்தகங்களில் பதிவேடுகளில் அல்லது கணக்குகளில்,

(i) பொய்யான பதிவிடொன்றைச் செய்கின்ற அல்லது செய்விக்கின்ற; அல்லது

(ii) ஏதேனும் பதிவிட்டைச் செய்யத் தவிர்க்கின்ற அல்லது தவிர்க்க வைக்கின்ற; அல்லது

(iii) ஏதேனும் பதிவீட்டை மாற்றுகின்ற, மறைக்கின்ற, சேமாக்குகின்ற அல்லது மாற்றப்பட மறைக்கப்பட அல்லது சேதமாக்கப்படச் செய்விக்கின்ற

ஆள் எவரும் இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியான எவரேனும் ஆள், ஒரு நீதிவானால் சுருக்க விசாரணையின் பின்னர், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு கடூழிய ஐந்து ஆண்டுகளை விஞ்சாத ஒரு காலத்திற்கு மறியற்றண்டணைக்கு அல்லது பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத ஒரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

15. இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாக இருக்குமிடத்து தவறு புரியும் காலத்தில் கூட்டிணைக்கப்பட்ட குழுவாக ஒரு பணிப்பாளராக அல்லது ஒரு அலுவலராக இருக்கும் ஒவ்வொரு ஆளும், அவரது அறிவு இல்லாமல் தவறு புரியப்பட்டது அல்லது அத்தகைய தவறைப் புரிவதற்கு எல்லா வித உரிய விழிப்புக்கவனத்தை அவர் பிரயோகித்தாரென எண்பித்தாலன்றி, அத்தவறுக்கு குற்றவாளியாவாரெனக் கருதப்படுதல் வேண்டும். பணிப்பாளர்களினதும் அலுவலர்களினதும் தவறுகள்.

16. (1) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயனுறுத்தலைக் கொடுக்கும் நோக்கத்திற்காக, ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்.

(2) குறிப்பாகவும் முற்போந்த தத்துவங்களின் பொதுமைக்கும் பங்கமின்றியும், அத்தகைய ஒழுங்குவிதிகள், பின்வரும் எல்லாம் அல்லது ஏதேனும் ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யலாம் :—

(அ) இக்கட்டளைச் சட்டங்களின்கீழ் திறைசேரி உண்டியல்களை வழங்கும் விதிகள்;

(ஆ) திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படவேண்டிய வகையும் முறையும்;

(இ) முதனிலை வணிகர்களின் நியமனமும் முதனிலை வணிகர்களினால் அவதானிக்கப்படவேண்டிய நிபந்தனைகளும், அவர்களுக்கு உரித்தான சிறப்புரிமைகளும் அவர்களினால் புரியப்படவேண்டிய கடமைகளும்;

(ஈ) நேரடி பங்குபற்றுனர்கள், வணிக நேரடி பங்குபற்றுனர்கள், அத்துடன் வணிகர் இடைத் தரகர்கள் என்பவர்களை நியமித்தலும் அவர்களின் ஒழுங்குவிதிகள் மேற்பார்வை அல்லது கண்காணித்தல் என்பனவும்;

(உ) இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் கட்டுப்பணமல்லாத திறைசேரி உண்டியல்களின் வழங்கலும், வைத்திருத்தலும், மீட்பும்

(ஊ) கட்டணமில்லாத திறைசேரி உண்டியல் உள்ளடங்கலாக, திறைசேரி உண்டியல்கள் அல்லது அவற்றின் மீதான வட்டிகள் கொள்வனவு செய்யப்படவேண்டிய, விற்கப்படவேண்டிய, மாற்றப்படவேண்டிய, அடையாளம் செய்யப்படவேண்டிய அல்லது பாரபந்தத்திற்குட்படுத்தப்பட வேண்டிய முறை;

(எ) திறைசேரி உண்டியல்கள் தொடர்பாக, முதனிலை வழங்கல், பின்னரான மாற்றம் அத்துடன் வேறு கொடுக்கல் வாங்கல் என்பனவற்றிற்கு ஏற்புடைய நடவடிக்கை முறைகளும் நிபந்தனைகளும்.

பொருள் கோடல்கள்.

17. இக்கட்டளைச் சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி—

"கூட்டுமொத்த வாடிக்கையாளர்கள் கணக்கு" என்பது, 10 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் பிரகாரம் ஒரு வணிகர் நேரடி பங்குபற்றுநரினால் மத்திய வங்கியுடன் பேணப்பட்ட ஒரு தனிக் கணக்கு என்று பொருளாகும்,

"மத்திய வங்கி" என்பது பணச் சட்டத்தின் 5 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி என்று பொருளாகும்,

ஒரு வணிகர் நேரடி பங்குபற்றுநர் தொடர்பான "வாடிக்கையாளர்" என்பது, அத்தகைய வணிகர் நேரடிப் பங்குபற்றுநர் மூலம் கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களை அல்லது அதன் மீதான ஒரு வட்டியைக் கொள்வனவுச்செய்யும் அல்லது விற்கும், அல்லது வேறுவகையில் கொள்ளும் அல்லது கையுதிர்க்கும், அல்லது அத்தகைய திறைசேரி உண்டியல்களை அல்லது வட்டியை சாத்தியமான கொள்ளலுக்கு அல்லது கையுதிர்ப்பிற்கு அத்தகைய வணிகர் நேரடி பங்குபற்றுநருடன் இணக்கப் பேச்சுவார்த்தை நடாத்தும் எவரேனும் ஆள், என்று பொருளாகும்;

"வணிகர் நேரடிப் பங்குபற்றுநர்" என்பது 10ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் நேரடிப் பங்குபற்றுநராக நியமிக்கப்பட்ட எவரேனும் நேரடி பங்குபற்றுநர் என்று பொருளாகும் ;

"பதவிப் பெயர் குறிக்கப்பட்ட வணிகரல்லாத விலைக் கேள்வியாளர்" என்பது, திறைசேரி உண்டியல்களின் மத்திய வங்கி ஏலத்தில் நேரடியாகக் கோரத்தகைமை பெற்றவராக மத்திய வங்கியினால் எழுத்தில் குறிப்பாகப் பெயர் குறிக்கப்பட்ட ஒரு முதனிலை வணிகரல்லாத ஏதேனும் முதலீடு செய்யப்பட்ட நிறுவனம் என்று பொருளாகும் ;

"நேரடிப் பங்குபற்றுநர்" என்பது ஒரு நேரடிப் பங்குபற்றுநராக 9ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் எழுத்தில் மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட எவரேனும் முதனிலை வணிகர் அல்லது வேறு ஆள் என்று பொருளாகும்;

"வணிகர் இடைத் தரகர்" என்பது 8ஆம் பிரிவின் உட்பிரிவு (1) (உ) வைப் பின்பற்றி மத்திய வங்கியினால் ஒரு வணிகர் இடைத் தரகராக நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள் அல்லது குழுமம் என்று பொருளாகும்;

ஒரு நேரடிப் பங்குபற்றுநர் தொடர்பாக "சொந்த கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல் கணக்கு" என்பது கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்களைத் தனது சொந்தக் கணக்கில் வைத்திருப்பதற்கு, 9ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் பிரகாரம் மத்திய வங்கியுடன், ஒரு நேரடிப் பங்குபற்றுநரினால் பேணப்பட்ட தனிக் கணக்கு என்று பொருளாகும்;

"அடையாளம்" என்பது கடன்களுக்கான அல்லது முற்பணங்களுக்கான இணைப்பொறுப்பாக அல்லது பகிரங்கப் பணங்களின் வைப்புக்களை அல்லது கடப்பாடொன்றின் நிறைவேற்றுகையைப் பெற்றுக்கொள்வதற்காகக் கட்டுப்பணமற்ற திறைசேரி உண்டியல்களை அடையாளம் வைத்தலை அல்லது அவற்றிலான ஏதேனும் பிணைப்பொறுப்பு அத்தகைய உள்ளடக்கும்;

“முதனிலை வணிகர்” என்பது, திறைசேரி உண்டியல்களுக்காக மு
னிலை அத்துடன் இரண்டாவது நிலை சந்தையில் ஒரு யா
றுத் திறத்தவராக மத்திய வங்கியுடன் கொடுக்கல் வாங்கல்
களைச் செய்யும் நோக்கத்துடன் முதனிலை வணிகராக, பண
சபையினால் நியமிக்கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கி, கம்பனி
அல்லது வேறு ஆள் என்பது பொருளாகும்;

“மத்திய வங்கியின் பதிவேடுகள்” என்பது பணச்சபையினால் அ
நோக்கத்திற்கென நியமிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் மத்
திய வங்கியின் சார்பில் பேணப்படும் பதிவேடுகளை உள்ளடக்கு
வதுடன், கணனிப் படலம், தட்டுக்கள், நாடாக்கள் அல்லது
வேறு காந்த இலத்திரனியல், கட்புல தொடர்பு சாதன வடிவில்
வைத்திருக்கப்படும், களஞ்சியப்படுத்தப்படும் அல்லது அனுப்பி
வைக்கப்படும் பதிவேடுகளையும் உள்ளடக்குகின்றது ;

“கட்டுப்பணமில்லாத திறைசேரி உண்டியல்” என்பது சான்றிதழ் ஒன்
றில் அல்லது வேறு உருப்படியான சாதனத்தில் உள்ளடக்கப்
படாததும் அல்லது குறிக்கப்படாததும் மத்திய வங்கியின் பதி
வேடுகளில் உள்ள பதிவேடுகளாக வழங்கப்பட்ட திறைசேரி
உண்டியல் என்று பொருளாகும்;

“திறைசேரி உண்டியல்” என்பது இக்கட்டளைச் சட்டத்தின்கீழ்
வழங்கப்பட்ட ஒரு திறைசேரி உண்டியல் என்று பொருளாகும்
என்பதுடன் கட்டுப்பணமற்ற திறைசேரி உண்டியல் ஒவ்வொன்றையும்
உள்ளடக்குகிறது.”.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

6. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே
ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி
நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387' (வெளிநாட்டு) ரூபா 1,849 ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆம் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, டிரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் வீதி, கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.